செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100
सत्यमेव जयते

**பயிலரங்க எண்ணிக்கை: 111** **நாள்: 05.01.2026**

**தமிழ் யாப்பிலக்கண மரபு**

பயிலரங்கம் -30

**Prosodic Tradition of Tamil**
**(21.01.2026 – 30.01.2026)**

**அறிவிப்பும் அழைப்பும்**

உலக மொழிகளில் தொன்மையும் இலக்கியச் செழுமையும் இலக்கணக் கட்டுக்கோப்பும் ஒருங்கே பெற்ற மொழிளில் ஒன்றாகத் திகழ்கிறது தமிழ் மொழி; இம்மொழி எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணக் கூறுகளைக் கொண்ட வளமார்ந்த இலக்கண மரபினை உடையது. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழ் இலக்கண மரபுகளை ஒவ்வொன்றாக ஆராய்ந்து பயிலரங்குகளை நடத்தி வருகிறது. அவ்வகையில் தற்போது **தமிழ் யாப்பிலக்கண மரபு** என்னும் தலைப்பிலான பயிலரங்கினை நடத்த உள்ளது.

தொல்காப்பியச் செய்யுளியல் தொடங்கி வீரசோழியம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், யாப்பொளி வரையிலான நூல்களும் இவற்றுக்கு எழுந்த உரைகளும் தமிழ் இலக்கண மரபில் யாப்பிலக்கணத்தின் வளர்ச்சியையும் நீட்சியையும் பறைசாற்றுகின்றன.

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் யாப்பு உறுப்புகள் குறித்தும் ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் பா வகைகள் குறித்தும் தாழிசை, துறை, விருத்தம் என்னும் பாவினங்கள் குறித்தும் காலந்தோறும் யாப்பிலக்கண மரபில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்தும் யாப்பிலக்கண உரை மரபு குறித்தும் விரிவாக ஆராயும் விதமாக இந்தப் பயிலரங்கம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இப்பயிலரங்கில் யாப்பிலக்கணத்தில் தேர்ந்த அறிவும் புலமையும் மிக்க அறிஞர் பெருமக்கள் பயிற்றுவிக்க உள்ளனர். பல்கலைக்கழகம்/ கல்லூரிகளில் முனைவர் பட்ட / ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களை இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

இப்பயிலரங்க வகுப்பு 21.01.2026 முதல் 30.01.2026 வரை 10 நாட்கள் நடைபெறவுள்ளது. இதன் விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை – 30
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 21.01.2026 முதல் 30.01.2026 முடிய 10 நாட்கள்.
- பயிலரங்கு நேரம்: காலை 10.00 - 1.00 & பிற்பகல் 2.00 - 5.00.
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
- விண்ணப்பக் கட்டணம் ஏதும் இல்லை
- விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பிவைக்க வேண்டும்
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/9Pb8ExKVVvev14y97 என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR-code) மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

- ❖ நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 12.01.2026. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.

- ❖ செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 13.01.2026 அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.

- ❖ இப்பயிலரங்கில் பங்கேற்போர் 34 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.

- ❖ பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

இயக்குநர்